www.kalvisolai.com

# 10ஆம் வகுப்பு – சமூக அறிவியல்
## காலக்கோடு

காலக்கோட்டினைப் பயிற்சி அளிக்கும்பொழுது தங்கள் மாணவர்களின் செயல் திறன்களுக்கு ஏற்ப நிகழ்வுகளை மாற்றிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. மாணவர்கள் முழு மதிப்பெண்கள் பெறுவது மட்டும்தான் நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

**1) 1900 – 1920 முடிய**

1905– வங்கப்பிரிவினை

1907–சூரத் பிளவு

1909–மிண்டோ மார்லி சீர்திருத்தம்

1914–முதல் உலகப்போர் தொடக்கம்

1919–ரௌலட் சட்டம்

1920–ஒத்துழையாமை இயக்கம்

**2) 1920–1940**

1920– ஒத்துழையாமை இயக்கம்

1922–சௌரி சௌரா சம்பவம்

1927–சைமன் குழு வருகை

1930–தண்டி யாத்திரை

1935–முதல் இந்திய அரசுச்சட்டம்

1940–ஆகஸ்ட் நன்கொடை

**3) 1930–1950**

1930–தண்டி யாத்திரை

1935–இந்திய அரசுச்சட்டம்

1942–வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1947–இந்தியா சுதந்திரம் அடைதல்

1950–இந்தியா குடியரசு ஆதல்

**வரலாறு– வரைபடம் ( ஆசியா)**

ஆசிரியர்களாகிய நாம் மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவதற்கு வரைபடம் மற்றும் காலக் கோட்டினை மீண்டும் மீண்டும் பயிற்சி அளித்தல் மிக்க நலமுடையதாகும். வரலாறு வரைபடத்திற்கு ஆசியாவில் மட்டும் பயிற்சி அளிக்க வேண்டுமெனில் 6ஆம் பக்கத்தில் உள்ள பயிற்சியை மட்டும் அளித்தால் போதும்.

**முக்கிய இடங்கள்**

1. துருக்கி, சீனா, பார்மோசா, சாகலின் தீவுகள், செங்கடல்
2. அரேபியா, பசிபிக் பெருங்கடல், ஹாங்காங், ஜப்பான், மங்கோலியா
3. ஈராக், நேபாளம், காண்டன், இந்தோனேசியா, இந்தியப்பெருங்கடல்
4. ஈரான், அரபிக்கடல், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், பீகிங் (பெய்ஜிங்).

வரலாறு வரைபடத்திற்கு இந்தியாவில் மட்டும் பயிற்சி அளிக்க வேண்டுமெனில் 58ஆம் பக்கத்தில் உள்ள பயிற்சியை மட்டும் அளித்தால் போதும்.

www.kalvisolai.com

## புவியியல் (இந்தியா)

**கீழே கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளை மீண்டும் மீண்டும் மாற்றி மாற்றிக் கொடுத்துப் பயிற்சி செய்தல் வேண்டும்.**

**இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.**

1. கரும்பு, நிலக்கரி, ராணா ஆப்கட்ச், சென்னை– மும்பை ரயில்பாதை, சுந்தரவனக்காடுகள்– கொச்சி, டெல்லி, காட்வின் ஆஸ்டின், மன்னார் வளைகுடா, காப்பி.
2. நெல், இரும்பு, காம்பே, கொல்கத்தா, மகாநதி, தேயிலை, சென்னை– டில்லி ரயில்பாதை, கரிசல்மண், சோழமண்டலக்கரை, விசாகப்பட்டினம்
3. பாக்ஜல சந்தி, வங்க கடல், பருத்தி, கோதுமை, சணல், எவரெஸ்ட், மேற்கு தொடர்ச்சி மலை, தொட்டபெட்டா, மங்களூர், ஹைதராபாத்.
4. சென்னை–கொல்கத்தா ரயில்பாதை,தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை,சென்னை – டெல்லி விமான வழி,மும்பை–சென்னை கடல் வழி,அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகள், காண்ட்லா, மலைக்காடுகள், நரிமணம்.
5. தூத்துக்குடி, பாரதீப், ஹால்டியா, நெய்வேலி, காவிரி ஆறு, நர்மதை, தபதி, வாசனைப்பொருட்கள், டார்ஜிலிங் (தேயிலை), ஜாம்ஷெட்பூர், நாகபுரி.
6. பருத்தி, சணல், அரிசி, தேயிலை, காப்பி மற்றும் கோதுமை விளையும் இடங்கள்.

## வேறுபாடுகள் (புவியியல்)

கொடுக்கப்பட்ட வேறுபாடுகள் **சிறு மாதிரிகள்** மட்டும்தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்றவண்ணம் வேறுபாடுகளை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.

### பாடம் - 1

1.

| வ.எண் | கிரீன்விச் நேரம் | இந்தியத் திட்ட நேரம் |
|---|---|---|
| 1 | உலகின் திட்ட நேரத்தை கணக்கிட உதவுகிறது. | இந்தியாவின் திட்ட நேரத்தை கணக்கிட உதவுகிறது. |
| 2 | லண்டன் வழியாகச் செல்கிறது. | அலகாபாத் வழியாகச் செல்கிறது. |

2.

| வ.எண் | மேற்குத் தொடர்ச்சிமலை | கிழக்குத் தொடர்ச்சி மலை |
|---|---|---|
| 1 | தொடர்ச்சியானது | தொடர்ச்சியற்றது |
| 2 | மேற்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. | கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. |

3.

| வ.எண் | காற்று மோதும் பக்கம் | காற்று மோதா பக்கம் |
|---|---|---|
| 1 | காற்று வீசும் திசையை நோக்கி உள்ள மலைச்சரிவு | மலையின் மறுபக்க சரிவு |
| 2 | மழைபெறும் பகுதி | மழை மறைவு பகுதி |

4.

| வ.எண் | தென்மேற்கு பருவக்காற்று | வடகிழக்கு பருவக்காற்று |
|---|---|---|
| 1 | ஜுன் முதல் செப்டம்பர் வரை | அக்டோபர் முதல் நவம்பர் வரை |
| 2 | மேற்கு கடற்கரைக்கு மழையை தருகிறது. | தமிழ்நாட்டிற்கு மழையை தருகிறது. |

5.

| வ.எண் | வானிலை | காலநிலை |
|---|---|---|
| 1 | ஒரு நாளைய தட்ப வெப்ப நிலை | 35 ஆண்டுகள் சராசரி வானிலை |
| 2 | மாறக்கூடியது. | மாறாதது. |

6.

| வ.எண் | லூ | நார்வெஸ்டர்ஸ் |
|---|---|---|
| 1 | கோடை காலத்தில் வீசுவது | வட இந்திய தலக்காற்று |
| 2 | வெப்பக்காற்று | மாஞ்சாரல் - இடியுடன் கூடிய மழை |

7.

| வ.எண் | பசுமை மாறா காடுகள் | பருவக்காற்று காடுகள் |
|---|---|---|
| 1 | உயர்ந்த மலைகளில் காணப்படும் | சமவெளிகளில் காணப்படுகிறது. |
| 2 | இலைகள் உதிராது. | இலைகளை உதிர்க்கும். |

8.

| வ.எண் | புதுப்பிக்கக்கூடிய வளம் | புதுப்பிக்க இயலாத வளம் |
|---|---|---|
| 1 | மீண்டும் உற்பத்தி செய்யக் கூடியது | மீண்டும் உற்பத்தி செய்ய முடியாதது. |
| 2 | சூரிய ஒளி , காற்று , நீர் | பெட்ரோலியம் , நிலக்கரி |

9.

| வ.எண் | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|
| 1 | உபரி பொருட்களை வெளிநாட்டிற்கு விற்பது | தேவை பொருட்களை வெளநாட்டிலிருந்து வாங்குவது |
| 2 | தேயிலை, கணினி மென்பொருள்கள் | பெட்ரோலியம் |

10.

| வ.எண் | நீர் மாசு | நில மாசு |
|---|---|---|
| 1 | நீர் மாசுபடுவது | நிலம் மாசுபடுவது |
| 2 | தொழிற்சாலை கழிவுகளால் | செயற்கை உரங்களால் மற்றும் வளமூட்டப்படுவதால் |

11.

| வ.எண் | ஒரு பயிர் சாகுபடி | இரு பயிர் சாகுபடி |
|---|---|---|
| 1 | ஓராண்டில் ஒரு பயிர் மட்டும் பயிர் செய்தல் | ஓராண்டில் இரு பயிர்கள் பயிர் செய்தல் |
| 2 | எகா : வாழை | எகா : நெல் , தானியம் |

12.

| வ.எண் | வான் வழி | நீர் வழி |
|---|---|---|
| 1 | விரைவான போக்குவரத்து | மலிவான போக்குவரத்து |
| 2 | எரிபொருள் செலவு அதிகம் | எரிபொருள் செலவு குறைவு. |

www.kalvisolai.com

# புவியியல்

## குறு வினாக்கள்

கொடுக்கப்பட்ட வினாக்கள் சிறு மாதிரிகள் மட்டும்தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்றவண்ணம் வினாக்களை வகைப்படுத்திச் சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.

1. இந்தியாவின் முக்கிய இயற்கை அமைப்பு பிரிவுகள்
    - வடக்கு மலைகள்
    - வட இந்தியச் சமவெளி
    - தீபகற்ப பீடபூமி
    - கடற்கரைச் சமவெளிகள்
    - தீவுகள்
2. இமய மலையின் முக்கியத்துவம்
    - தென்மேற்கு பருவக்காற்றினை தடுத்து நல்ல மழையை தருகிறது.
    - அந்நிய படையெடுப்பைத் தடுக்கிறது.
3. இந்தியா ஏன் துணைக்கண்டம் என்று அழைக்கப்படுகிறது?
    - ஒரு கண்டத்தில் காணப்படக் கூடிய அனைத்து இயற்கை அமைப்புகளும் இந்தியாவில் காணப்படுவதால் துணைக்கண்டம் என்று அழைக்கப்படுகிறது .
4. இந்திய தீவுக் கூட்டங்கள்
    - அந்தமான் நிக்கோபார்
    - இலட்சத்தீவுகள்
5. இந்திய காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகள்
    - அட்சக்கோடு தீர்க்ககோடு
    - உயரம்
    - கடலிலிருந்து தூரம்
    - காற்று
    - மலைகளின் அமைவு
6. மழைநீர் சேகரித்தல் என்றால் என்ன?
    - மழை பெய்யும் பொழுது அவற்றை சேகரித்து பிறகு பயன்படுத்துதல்.
7. இயற்கை வளம் என்றால் என்ன?
    - அன்றாட வாழ்வின் தேவையை நிறைவு செய்ய
    - இயற்கையிலிருந்து பெறப்படும் அனைத்து பொருள்களும் இயற்கை வளம் என்கிறோம்.
8. செழுமையான மண்ணில் காணப்படும் பொருட்கள்
    - நுண்ணிய சத்து, கந்தகம், குளோரின், செம்பு, இரும்பு
    - நைட்ரஜன், பொட்டாசியம் மற்றும் பாஸ்பேட்
9. இந்தியாவின் மைக்கா உற்பத்தி செய்யும் இடங்கள்
    - ஆந்திரா
    - பீகார்
    - ராஜஸ்தான்
    - ஜார்க்கண்ட்
10. தோட்டப் பயிர்கள் யாவை?
    - தேயிலை, காப்பி, ரப்பர்
11. வேளாண் தொழிலின் வகைகள் யாவை?
    - தன்னிறைவு வேளாண்மை
    - வணிக வேளாண்மை
    - பழமையான வேளாண்மை
    - தோட்ட வேளாண்மை

12. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் என்றால் என்ன?
- வேளாண் பொருட்களை மூலப் பொருட்களாக பயன்படுத்துவது
- பருத்தி, சணல், சர்க்கரை ஆலைகள்

13. சணல் பொருள்கள் யாவை?
- கூடாரத்துணி, சணல் பைகள், கோணிப்பைகள், கெட்டித்துணி

14. மின்னியல் கழிவு என்றால் என்ன?
- கணினி, கைபேசி, அச்சு இயந்திரங்கள், தொலைக்காட்சி பெட்டி போன்றவை பயன்படாத நிலையில் வீசப்படுவது.

15. ஒலி மாசடைதல் என்றால் என்ன?
- மனிதர்கள் மற்றும் இயந்திரங்களால் ஏற்படும் ஒலி சமநிலையை பாதிப்பது ஆகும்

16. வணிகம் என்றால் என்ன? வகைகள் யாவை?
- பொருட்களை வாங்குவதும் விற்பதும் வணிகம்
- 1.உள்நாட்டு வணிகம் 2. வெளிநாட்டு வணிகம்

17. குழாய் போக்குவரத்தின் நன்மைகள்
- நீருக்கு அடியிலும் அமைக்கலாம் -( மும்பைஹை)
- பராமரிப்பு செலவு குறைவு.

18. தகவல் போக்குவரத்து வலையமைப்பின் நன்மைகள்
- கலாச்சார ஒற்றுமையை அதிகரிக்கச் செய்கிறது.
- சமூக பொருளாதார தொடர்புகளை மேம்படுத்துகிறது.

19. தொலை நுண்ணுணர்வு என்றால் என்ன?
- புவியின் விவரங்களை தொலைவில் இருந்து சேகரிப்பது தொலை நுண்ணுணர்வு ஆகும்.

20. புவி தகவல் தொகுதி வரையறு?
- கணினி மென்கட்டளைத் தொகுப்பு , பரப்பு சார் புள்ளி விவரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டதாகும்.

21. பேரிடர் அபாய நேர்வு குறைப்பு வரையறு?
- ஒரு பேரிடரின் தீவிரமானது சமுதாயத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம், நம் உயிர்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க எடுத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாகும்.

## பத்தி வினாக்கள்

கொடுக்கப்பட்ட விடைகள் சிறு மாதிரிகள் மட்டும்தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் விடைகளை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.

1. **வேற்றுமையில் ஒற்றுமை விவரி.**

**வேற்றுமை :**
- மிக உயர்ந்த மலைகள் , சிறிய சமவெளிகள்
- பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்குகள்
- பல மொழிகள், பல சமயங்கள் , விழாக்கள்
- பண்பாடு , நாகரிகம் , உணவு பழக்க வழக்கங்கள்
- கலைகள் மற்றும் கட்டடங்கள்

**ஒற்றுமை :**

- போர்க்காலத்தில் இந்தியர் என்ற ஒற்றுமை
- சுதந்திரதினம், குடியரசு தினம் போன்றவற்றில் ஒருமைப்பாடு

2. **தென்மேற்குப் பருவக்காற்று ஏதேனும் ஒரு கிளை விவரி.**

தென்மேற்குப் பருவக்காற்று அரபிக்கடல் கிளை மற்றும் வங்காள விரிகுடா கிளை என இரு பிரிவுகளாக வீசுகிறது.

**அரபிக்கடல் கிளை :**

- அரபிக்கடலில் இருந்து வீசுகிறது
- மேற்குக் கடற்கரைக்கு கனமழையை கொடுக்கிறது.
- தக்காணப் பீடபூமி குறைந்த மழையை பெறுகிறது.
- ஆரவல்லி மலை காற்று வீசும் திசைக்கு இணையாக உள்ளது.
- ராஜஸ்தானுக்கு மழைப் பொழிவைத் தருவதில்லை.

3. **காடுகளின் முக்கியத்துவம் விவரி.**

- மூலப் பொருட்களைத் தருகிறது.
- மண் அரிப்பைத் தடுக்கிறது.
- விலங்குகளின் வாழிடமாக அமைகிறது.
- நிலத்தடி நீரை உயர்த்துகிறது.
- சுற்றுலா மையமாக உள்ளது.
- குடிசைத் தொழிலுக்குப் பயன்படுகிறது
- மூலிகைகள் மற்றும் மருந்து பொருட்களைத் தருகிறது.

4. **இந்தியாவின் சாலை வழிகளை விவரி.**

- கிராமச்சாலை - கிராமங்களை நகரத்துடன் இணைக்கிறது.
- மாவட்டச் சாலை - நகரங்களை மாவட்ட தலைநகரங்களுடன் இணைக்கிறது.
- மாநிலச் சாலை - மாவட்டத் தலைநகரங்களை மாநில தலைநகருடன் இணைக்கிறது.
- தேசிய நெடுஞ்சாலை - மாநில தலைநகரங்களை நாட்டின் தலைநகருடன் இணைக்கிறது.
- தங்க நாற்கர சாலை - மாபெரும் சாலை வளர்ச்சி திட்டம் (குறிப்பிட்ட நகரங்களை மட்டும் இணைக்கிறது.)
- விரைவுவழி சாலை- மாபெரும் சாலை வளர்ச்சி திட்டம் (குறிப்பிட்ட நகரங்களை மட்டும் இணைக்கிறது.)

## கூடுதல் வினாக்கள்

1. தீபகற்ப பீடபூமி – குறிப்பு வரைக
2. பருவ மழை வெடிப்பு என்பதன் பொருள்யாது?
3. மழைநீர் சேகரிப்பினை விளக்குக
4. உள்நாட்டு வணிகம் - பன்னாட்டு வணிகம்
5. தொலைநுண்ணுணர்வு நுட்ப தொகுதிகளை விவரி
6. உயிரினப்பன்மை என்றால் என்ன?
7. வேளாண் தொழிலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?
8. தன்னிறைவு வேளாண்மை – வணிக வேளாண்மை
9. வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்
10. மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்க காரணம் யாது?

www.kalvisolai.com

# குடிமையியல்

## குறு வினாக்கள்

**கொடுக்கப்பட்ட வினாக்கள் சிறு மாதிரிகள் மட்டும்தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் வினாக்களை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.**

1. உலக அமைதியை நிலைநாட்டுவதில் இந்தியாவின் பங்கு யாது?
   - சூயஸ் கால்வாய் பிரச்சினையைத் தீர்த்தது.
   - காங்கோ உள்நாட்டுப் பிரச்சினையில் அமைதி ஏற்படுத்தியது.
   - சைப்ரஸ் தீவில் அமைதியை நிலை நாட்டியது.
2. உலக அமைதி அவசியம் ஏன்?
   - உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உலக அமைதி அவசியம்
   - உலகில் ஒற்றுமை ஏற்பட உலக அமைதி அவசியம்
3. இன ஒதுக்கல் கொள்கை பற்றி குறிப்பு வரைக?
   - இது ஆப்பிரிக்காவில் பின்பற்றப்பட்ட கொள்கை
   - நெல்சன் மண்டேலாவின் முயற்சியால் 1990 ல் இது முடிவுக்கு வந்தது.
4. ஜனநாயகம் பற்றி லிங்கனின் கருத்து யாது?
   - மக்களால், மக்களுக்காக, மக்களே ஆட்சி புரிவது.
5. தேசிய கட்சிகள் என்றால் என்ன? அவை யாவை?
   - நாடாளுமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 6 % மேல் பெற்ற கட்சிகள் (நான்கு மாநிலங்களுக்கு மேல்)
   - எகா : காங்கிரஸ், பா.ஜ.க
6. இந்தியாவின் கலை , கட்டிடக்கலை பற்றி கூறுக?
   - அஜந்தா, எல்லோரா ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை.
   - காந்தாரக் கலை மற்றும் சிற்பக்கலை இந்தியாவின் கலைக்கு உதாரணமாகும்.
   - இந்திய கோயில்கள் கட்டிடக் கலைக்கு சிறப்பு பெற்றது.
7. மனித இனத்தின் அருங்காட்சியகம் என இந்தியர்கள் அழைக்கப்படுவது ஏன்?
   - இந்தியாவில் உள்ள 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஜாதி , மதம், மொழி மற்றும் இனத்தை பற்றி படிக்கக் கூடிய அருங்காட்சியமாகவும், ஆய்வகமாகவும் திகழ்வதால் மனித இனத்தின் அருங்காட்சியகம் என இந்தியர்கள் அழைக்கப்படுகிறார்கள்.
8. தேர்தல் ஆணையத்தின் பணிகள்
   - அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தல்
   - தேர்தல் சின்னங்களை ஒதுக்குதல்
   - பொதுத்தேர்தல் நடத்துதல்

**பத்தி வினாக்கள்**

**கொடுக்கப்பட்ட விரிவான விடைகள் சிறு மாதிரிகள் மட்டும் தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் விரிவான விடையை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.**

1. பஞ்சசீலம், அணிசேராக் கொள்கை விவரி?

**பஞ்சசீலம் :**

- பிற நாட்டின் ஒற்றுமையை மதிக்க வேண்டும்.
- பிற நாட்டைத் தாக்கக் கூடாது.
- பிற நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது.
- பிற நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.
- பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கி இருத்தல் வேண்டும்

**அணிசேராக் கொள்கை :**

- இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலகம் இரண்டு அணிகளாகப் பிரிந்தது.
- அமெரிக்கா தலைமையில் ஓர் அணி, ரஷ்யா தலைமையில் ஓர் அணி
- இந்தியா இரண்டு அணிகளிலும் சேராமல் நடுநிலைமை வகிக்கிறது.இதற்கு அணி சேராக் கொள்கை என்று பெயர்.
- இதன் மூலம் இந்தியா உலகில் அமைதியை நிலை நாட்டி வருகிறது.

2. ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியின் பங்குகள் பற்றி விவரி?

- மக்களாட்சியின் வெற்றி எதிர்க்கட்சிகளின் செயல்பாட்டை ஒட்டி அமைகிறது.
- ஆளுங்கட்சிக்கு அடுத்தபடியாக அதிக இடங்களைப் பெறும் கட்சி எதிர்க் கட்சியாகும்.
- எதிர்க்கட்சித் தலைவர், ஆளுங்கட்சி அமைச்சருக்கு சமமான அதிகாரமுடையவர்.
- ஆளுங்கட்சியின் செயல்பாடுகளை கண்காணித்து நிறை குறைகளை வெளிப்படுத்துவது இவர்களுடைய வேலை ஆகும்.
- ஆளுங்கட்சியினரை விமர்சிப்பதால், அதிகாரங்களை தவறாக பயன்படுத்துவதற்கு எதிர்கட்சிகள் தடையாக உள்ளன.

**கூடுதல் வினாக்கள்**

1. நுகர்வோரைப் பாதுகாக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?
2. தேர்தல் முறையை குறிப்பிட்டு விளக்கம் தருக.
3. இந்தியா ஜநாவின் தீவிர ஆதரவாளர் இக்கூற்றை நியாயப்படுத்துக.
4. ஜனநாயகத்தின் வகைகள் மற்றும் முக்கியத்துவம் - விளக்குக.
5. நுகர்வோர் உரிமைகள் பற்றி எழுதுக.

www.kalvisolai.com

# பொருளியல்

## குறுவினாக்கள்

**கொடுக்கப்பட்ட வினாக்கள் சிறு மாதிரிகள் மட்டும் தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் வினாக்களை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.**

1. நாட்டு வருமானத்தை வரையறு?
   - ஒரு நாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
2. தலா வருமானம் என்றால் என்ன?
   - ஒரு நாட்டின் வருமானத்தை மொத்த மக்கள் தொகையால் வகுத்தால் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.
3. தாராளமயமாதல் என்றால் என்ன?
   - தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் விதிகளை தளர்த்துதல் ஆகும்.
4. கலப்பு பொருளாதாரம் பற்றி கூறுக?
   - நிறுவனங்களை அரசும் , தனியாரும் சமமாக நிர்வாகம் செய்வதாகும்.

## பத்திவினாக்கள்

**கொடுக்கப்பட்ட விரிவான விடை சிறு மாதிரிகள் மட்டும் தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் விரிவான விடையை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.**

1. நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகளை விவரி?
   1. **உற்பத்தி முறை**
   2. **வருமான முறை**
   3. **செலவின முறை**

**உற்பத்தி முறை :**

- ஒரு நாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு.

**வருமான முறை :**

- ஒரு நாட்டின் அனைத்து மக்களின் வருமானத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

**செலவின முறை :**

- மக்களின் நுகரும் பொருட்களுக்கான செலவு , முதலீடு , சேமிப்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

## கூடுதல் வினாக்கள்

1. தலையிடாக் கொள்கை - குறிப்பு வரைக
2. உலகமயமாதல் என்றால் என்ன?
3. பசுமைப் புரட்சியை விளக்குக
4. 11 – வது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களை எழுதுக.
5. தமிழ்நாட்டின் மின்சக்தி திட்டங்களை விவரி.

# வரலாறு

## தலைப்பு வினாக்கள்

கொடுக்கப்பட்ட தலைப்பு வினாக்கள் **சிறு மாதிரிகள்** மட்டும் தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் தலைப்பு வினாக்களை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.

1. பிளாசி மற்றும் பக்சார் போர்
   - அ. 1757 ம் ஆண்டு வங்காளத்தின் நவாப்பாக இருந்தவர் யார்?
     சிராஜ் உத்-தௌளலா
   - ஆ. துணைப் படைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் யார்?
     வெல்லெஸ்ஸி
   - இ. டல்ஹௌசி பிரபுவின் கொள்கை யாது? -- வாரிசு இழப்புக் கொள்கை
   - ஈ. விக்டோரியா மகாராணியின் பிரகடனம் எப்பொழுது வெளியிடப்பட்டது? -- 1858
2. பிராங்களின் டி.ரூஸ்வெல்ட்
   - அ. ஜனாதிபதி தேர்தல் எப்பொழுது நடைபெற்றது? -- 1932
   - ஆ. பிராங்களின் டி ரூஸ்வெல்ட் எவ்வாறு அழைக்கபட்டார்? -- **எப்.டி. ரூஸ்வெல்ட் (F.D.R)**
   - இ. அவரது தேர்தல் அறிக்கை யாது?
     **"அமெரிக்க மக்களுக்குப் புதிய பயனுரிமை கொள்கையை அர்ப்பணிக்க நான் உறுதி அளிக்கிறேன்.'**
   - ஈ. அவர் உருவாக்கிய கொள்கையின் பெயர் என்ன?
     புதிய பயனுரிமை **என்ற புதிய சீரமைப்புக்கொள்கை.**
3. மத்திய இந்தியாவில் பெரும் புரட்சி
   - அ. மத்திய இந்தியாவில் பெரும் புரட்சியை வழிநடத்திச் சென்றவர் யார்?
     ஜான்சிராணி இலட்சுமிபாய்
   - ஆ. இராணி இலட்சுமிபாய் கைப்பற்றிய நகரம் எது? -- குவாலியர்
   - இ. இராணி இலட்சுமிபாயின் முடிவு என்ன? – கொல்லப்பட்டார்
   - ஈ. தாந்தியா தோப்பிற்கு நிகழ்ந்தது என்ன? -- கைதுசெய்யப்பட்டு கொல்லப்பட்டார்
4. ஜாலியன் வாலாபாக் படுகொலை
   - அ. கைது செய்யப்பட்ட முக்கியமான தலைவர்கள் யார்? —
     சத்தியபால் , சாய்புதின் கிச்லு
   - ஆ. மக்கள் எங்கு கூடினர்? — அமிர்தசரஸ் - ஜாலியன் வாலாபாக் தோட்டம்
   - இ. அமிர்தசரஸில் ஆங்கில இராணுவ தளபதி யார்? -- ஜெனரல்.ஓ.டயர்
   - ஈ. இரவீந்திரநாத் தாகூர் செய்தது என்ன? -- நைட்வுட் பட்டத்தை துறந்தார்
5. கே. காமராஜர்
   - அ. காமராஜர் எப்படி அரசியலில் நுழைந்தார்? – வைக்கம் போராட்டம் மூலம்
   - ஆ. 1930 ல் எங்கு சிறையில் அடைக்கப்பட்டார்? – அலிப்பூர் சிறை
   - இ. 1947 ம் ஆண்டு இந்திய தேசிய கொடியை எங்கு ஏற்றினார்? –
     திருமயம் சத்திய மூர்த்தி வீட்டில்
   - ஈ. காமராஜர் எப்பொழுது இறந்தார்? – 1975

**குறுவினாக்கள்**

கொடுக்கப்பட்ட வினாக்கள் **சிறு மாதிரிகள்** மட்டும் தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் வினாக்களை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.

1.ஏகாதிபத்தியம் - வரையறு

ஒருநாடு (வல்லரசு) பிற நாடுகளின் அரசியலிலும் பொருளாதாரத்திலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுதல்.

2. முதல் உலகப்போரின் உடனடிக்காரணம் யாது?

ஆஸ்திரிய இளவரசர் பெர்டினான்டு செர்பிய இளைஞனால் சுட்டுக்கொல்லப்பட்டார். செர்பியாவின் விளக்கம் ஆஸ்திரியாவிற்கு திருப்தி அளிக்காததால் போரைத் தொடங்கினர்.

3. பொருளாதார பெருமந்தத்தை F.D.R எவ்வாறு நிலைக்கு கொண்டு வந்தார்?
புதியபயனுரிமை என்ற சீரமைப்புக் கொள்கையை உருவாக்கினார். உதவி, மீட்பு, சீர்திருத்தம் என்ற மூன்றின் மூலம் நிலைக்கு கொண்டு வந்தார்.
4. பாசிசத்தின் நான்கு தூண்கள் யாவை?
ஒரே தலைமை , ஒரே கட்சி ஆட்சி, பயங்கரவாதம், பொருளாதார ஆளுமை பாசிசத்தின் நான்கு தூண்கள் ஆகும்.
5. இரண்டாம் உலகப்போரில் பங்கு பெற்ற இரு அணி நாடுகள் யாவை?
இங்கிலாந்தின் தலைமையிலான நேச நாடுகள்
ஜெர்மனியின் தலைமையிலான அச்சு நாடுகள்
6. 1857ஆம் ஆண்டு மாபெரும் கிளர்ச்சியின் உடனடிக் காரணம் யாது?
பன்றி மற்றும் பசுவின் கொழுப்பு தடவிய என்பீல்டு ரகத் துப்பாக்கியைப் பயன்படுத்த கட்டாயப்படுத்துதல்.
7. பிரம்ம **ஞான சபையின் கொள்கைகளைப்** பற்றி கூறுக.
மக்களிடையே சகோதரத்துவ உணர்வை வளர்க்கவும்,பண்டைய **சமயங்கள்,தத்துவங்கள் ,அறிவியல் மற்றும் இயற்கையின் நியதிகளை அறிந்து தெய்வீக சக்திகளை வளர்ப்பதாகும் .**
8. சுப்பிரமணிய பாரதியாரின் ஒரு சில பாடல்களை எழுதுக?
வந்தே மாதரம்,**அச்சமில்லை அச்சமில்லை, எந்தையும் தாயும்,ஜெயபாரதம்**
9. காமராஜரின் **நலத்திட்டப்பணிகள்** பற்றி கூறுக
**மதிய உணவுத்திட்டம், இலவசக்கல்வி வழங்குதல்,அணைகளைக்கட்டுதல், வேளாண்மையை மேம்படுத்துதல்**
10. மிதவாத, தீவிரவாத தலைவர்கள் நால்வரை கூறு
**மிதவாத தலைவர்கள் :-** சுரேந்தரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, கோகலே, எம்.ஜி.ரானடே
**தீவிரவாத தலைவர்கள் :-** திலகர், லாலா லஜபதிராய், பிபின் சந்திரபால் , அரவிந்த கோஷ்
11. ஆகஸ்டு நன்கொடை பற்றி கூறுக
இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இந்தியர்க்கு பிரதிநிதிதுவம் .
சின்ஹா என்பவர் 1940 ல் இந்திய பிரதிநிதியாகப் பங்கேற்றார்.
12. இந்தியா எவ்வாறு பிரிக்கப்பட்டது?
சிந்து , மேற்கு பஞ்சாப் உள்ளிட்ட சில மாநிலங்கள் பாகிஸ்தான் என்றும் பிற பகுதிகள் இந்தியா என்றும் பிரிக்கப்பட்டது.
13. ஒப்படைப்பு முறைபற்றி கூறுக
புதிய ஏகாதிபத்தியத்தின் இறுதி வழிமுறை.
பிற்படுத்தப்பட்ட நாடுகள் , சர்வதேச சங்கம் மூலம் பிற நாடுகளிடையே ஒப்படைக்கப்படுதல்.

14. தைபிங் கலகம் பற்றி கூறுக
1854 ல் சீனர்கள் தங்கள் அரசு மற்றும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக கலகம் செய்தனர் இதற்கு தைபிங் கலகம் என்று பெயர்.
15. முதல் அபினி போர் பற்றி கூறுக
1800 ல் சீன அரசு அபினி வர்த்தகத்தை தடை செய்தது.
1839 ல் ஆங்கிலேயர் அபினி வர்த்தகத்தை நடத்த சீன அரசின் மீது போர் தொடுத்தனர்.
1842 நான்கிங் உடன்படிக்கையின் படி முடிவுற்றது.

16. தேசிய தொழில் மீட்புச்சட்டம் - குறிப்பு வரைக
தேசிய தொழில் மீட்புச்சட்டத்தின் படி தொழிற்சாலைகளில் சம்பள உயர்வு, பணி நேரம் குறைப்பு போன்ற சீர்திருத்தங்கள் ஏற்பட்டன.
17. முசோலினியின் இரண்டு சாதனைகளை கூறுக
இத்தாலியில் அமைதி, ஒழுங்கை நிலைநாட்டினார்.
திறமையான நிர்வாகத்தின் மூலம் நிலையான அரசை ஏற்படுத்தினார்